வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2017
# Term Examination, June - 2017

| வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2017) |
|---|---|---|

## வணிகக்கல்வி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 3 | 07) 5 | 13) 2 | 19) 4 | 25) 3 |
| 02) 2 | 08) 1 | 14) 5 | 20) 1 | 26) 4 |
| 03) 4 | 09) 2 | 15) 2 | 21) 4 | 27) 1 |
| 04) 2 | 10) 4 | 16) 3 | 22) 3 | 28) 3 |
| 05) 5 | 11) 3 | 17) 5 | 23) 2 | 29) 2 |
| 06) 3 | 12) 4 | 18) 2 | 24) 4 | 30) 4 |

(30 x 2 = 60 புள்ளிகள்)

31) அ) பலம், பலவீனம் (2x½ = 1 புள்ளி)
ஆ) வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் (2x½ = 1 புள்ளி)

32) அ) வியாபாரம், துணைச்சேவை (2x½ = 1 புள்ளி)
ஆ) சிறப்புப், கைத்தொழில் (2x½ = 1 புள்ளி)

33) அ) முகாமையாளர், போட்டியாளர் (2 × ½ = 1 புள்ளி)
ஆ) உள்ளக, அண்மிய (2 × ½ = 1 புள்ளி)

34) அ) கரைகடந்த கம்பனி
வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி (2 × ½ = 1 புள்ளி)
ஆ) இறக்குமதிக் குறிப்பு, பட்டியல் (2 × ½ = 1 புள்ளி)

35) 1. பிழை
2. சரி
3. பிழை
4. பிழை (4×½ = 2 புள்ளி)

36) அ) 1. அளிடைத் தொடர்பு வகிபாகம்
2. தகவலளிப்பு வகிபாகம்
3. தீர்மானம் எடுத்தல் வகிபாகம் (2×½ = 1 புள்ளி)
ஆ) தலைமைத்துவம் (1 புள்ளி)

37) அ) 1. வணிகத்திலிருந்து வணிகம் (B2B)
2. வணிகத்திலிருந்து வாடிக்கையாளர் (B2C)
3. வாடிக்கையாளரிலிருந்து வாடிக்கையாளர் (C2C)
4. அரசாங்கத்திலிருந்து பிரஜைகள் (G2C) (2×½ = 1 புள்ளி)
ஆ) 1. பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்
2. கூட்டுறவுக்கிராமிய வங்கிகள்
3. சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (2×½ = 1 புள்ளி)



The National e-learning Portal for The General Education

38) அ) வேலை உற்பத்தி / கட்டளை உற்பத்தி
பூச்சிய வழு (2×½ = 1 புள்ளி)
ஆ) தேசிய, தனிப்பட்ட (2×½ = 1 புள்ளி)

39) அ) இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு
மத்திய வைப்பகமுறைமை (தனியார்) கம்பனி (2×½ = 1 புள்ளி)
ஆ) வேலை விபரணம்
வேலை குறித்துரைத்தல் (2×½ = 1 புள்ளி)

40) அ)
1. மனிதவளத்திட்டமிடல்
2. செயல்திறன் மதிப்பீடு
3. பயிற்சியும் அபிவிருத்தியும்
4. ஊழியர் சம்பள முறைமை
5. ஊழியர் வருகை (2×½ = 1 புள்ளி)

ஆ) வணிகக் கருத்து (1 புள்ளி)

41)
1. அத்தியாவசியமானவை
2. பொதுத்தன்மை கொண்டவை
3. தோற்றுவிக்க முடியாதிருத்தல்
4. வரையறுக்கப்பட்டவை (4×½ = 2 புள்ளி)

42)
1. பணம்
2. வங்கி
3. காப்புறுதி
4. போக்குவரத்து
5. களஞ்சியப்படுத்தல்
6. தொடர்பாடல் (4×½ = 2 புள்ளி)

43)
1. மத்திய வங்கி
2. வங்கிகள் / வங்கித்துறை
3 வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
4. ஏனைய விசேட நிதி நிறுவனங்கள்
5. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் (4×½ = 2 புள்ளி)

44)
1. திருத்தமானது / செம்மை
2. சுருக்கம்
3. பூரணத்துவம்
4. தெளிவு
5. நெறிமுறையாது
6. கிரயம் / செலவு
7. விரைவு / வேகம் (4×½ = 2 புள்ளி)

45)
1. கைத்தொழில் அபிவிருத்திச்சபை
2. கைத் தொழில்நுட்ப நிறுவனம்
3. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (2×1 = 2 புள்ளி)

46) 1. ABC பகுப்பாய்வு
2. இரட்டைக் கொள்கலன் முறை
3. கணினிச் செயல் திட்டம்
4. தொடர் இருப்பெடுத்தல் (4×½ = 2 புள்ளி)

47) 1. கணினி உதவியுடனான வடிவமைப்பு
2. கணினி உதவியுடனான உற்பத்தி
3. கணனியுடன் ஒருங்கிணைந்த உற்பத்தி
4. கணினி எண்சார் கட்டுப்பாட்டகம் (4×½ = 2 புள்ளி)

48) அ) பங்குலாபம்
மூலதன இலாபம் (2×½ = 1 புள்ளி)
ஆ) அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (ASPI)
SxP Sri Lanka 20 (2×½ = 1 புள்ளி)

49) 1. கூட்டுப்பேரம் பேசுதல்
2. சட்டப்படி வேலை செய்தல்
3. மெதுவாக வேலை செய்தல்
4. மேலதிக வேலைகளில் ஈடுபடாதிருத்தல்
5. அடையாள வேலை நிறுத்தம்
6. தொடர் வேலை நிறுத்தம் (4×½ = 2 புள்ளி)

50) அ) 1. பணியாளரின் குறிப்பேடு
2. தகவல் பத்திரம்
3. பழைய ஊழியர்களைப் பயன்படுத்தல்
4. வீடியோ திரைப்படம்
5. விரிவுரை (2×½ = 1 புள்ளி)

ஆ) 1. கணித்தல் தொழில்நுட்பம்
2. தொடர்பாடல் தொழில்நுட்பம்
3. தகவல் முகாமைத்துவத் தொழில்நுட்பம் (2×½ = 1 புள்ளி)

The National e-learning Portal for The General Education

## வணிகக்கல்வி - II
## பகுதி - I

*01)*

(i).

அ) வணிகம் என்பது வியாபாரத்திலிருந்தும் விரிந்து காணப்படுகின்றது. அதாவது பொருள்கள், சேவைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தல் வியாபாரம் ஆகும். மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு பொருளாதாரச் செயற்பாடுகளும் வணிகம் ஆகும். வணிகத்தினுள் கைத்தொழிலும் வர்த்தகமும் உள்ளடக்கப்படும். (2 புள்ளிகள்)

ஆ)

| நுகர்வோர் பொருள்கள் | - கைத்தொழில் பொருள்கள் |
|---|---|
| 1. வசதிப்பொருட்கள் | 1. மூலதனப் பொருட்கள் |
| 2. கடைப்பொருள்கள் | 2. மூலப்பொருட்களும் உதிரிப்பாகங்களும் |
| 3. சிறப்புப்பொருட்கள் | 3. வழங்கலும் வணிகச் சேவைகளும் |
| 4. நாடாப் பொருட்கள் | |

(பூரண விடைகளும் 01+01=02 புள்ளிகள்)

(ii). அ)
1. உரிமையாளர் :- இலாபம், அபிவிருத்தி, சந்தைப் பங்கு.
2. முகாமையாளர்கள் :- இலாபம், வணிகத்தின் வளர்ச்சி, எடுத்ததீர்மானங்களின் வெற்றிகரத்தன்மை, தொழில் அபிவிருத்தி
3. ஊழியர்கள் :- நியாயமான சம்பளம், மேலதிகக் கொடுப்பனவுகள், வேலையில் திருப்தி தொழில் பாதுகாப்பு, பதவி உயர்வு
4. வழங்குனர்கள் :- கட்டளைகளைக் தொடர்ந்து பெறவும், பணத்தை உரிய நேரத்தில் மீள் அறவிடலும்.
5. வாடிக்கையாளர்கள் :- தரமான பொருட்கள் அல்லது சேவைகள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளல், வணிகத்தின் உறுதிப்பாடு பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்றல்.
6. அரசு :- வரி, வேலை வாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி
7. சமூகம் :- சூழலைப் பாதுகாத்தல், வேலை வாய்ப்புக்கள், சமூக நலன்
8. போட்டியாளர்கள் :- விற்பனை உபாயங்களை தீர்மானம் செய்தல், தகவல்களை அறிந்து கொள்ளல், போட்டி நிலைமைகளுக்கு முகம் கொடுத்தல்
9. கடன் வழங்குனர்கள்:- கடன் பணத்தின் பாதுகாப்பு, மனப் பெறும் திறன் பாதுகாப்பு
10. எதிர்கால முதலீட்டாளர்கள் :- எதிர்காலத்தில் தமது வளங்களை முதலீடு செய்வதற்கு.

(இருதரப்பினைக் குறிப்பிட ($2\times\frac{1}{2}$ = 1 புள்ளி)
(இருதரப்பினைக் விளக்க ($2\times\frac{1}{2}$ = 1 புள்ளி)

ஆ)
1. சந்தையில் நிலைத்திருத்தல்
2. இலாபத்தை உச்சப்படுத்தல்
3. விற்பனையை உச்சப்படுத்தல்
4. சந்தைப்பங்கினை அதிகரித்துக் கொள்ளல்
5. நுகர்வோரது தேவைகளை, விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்
6. தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்
7. பொருட்கள் சேவைகளினது தரத்தை மேம்படுத்தல்
8. ஊழியர் நலன்களைப் பேணல்

($4\times\frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

(iii). அ) 1. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
2. வாடிக்கையாளராகச் செயற்படல்
3. போட்டியாளராக செயற்படல்
4. கொள்கை வகுப்பாளராக செயற்படல்
5. சட்ட திட்டங்களை விதிப்பவராக செயற்படல்
6. ஊக்குவிப்புக்களை வழங்குபவராக செயற்படல்
7. வரி அறவிட்டு முகவராக செயற்படல்

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. விரயங்கள் அழிவுகள் குறைக்கப்படும்
2. வாடிக்கையாளரிடையே பொருளின் மதிப்பு அதிகரிப்பதனால் கேள்வி அதிகரிப்பு
3. நுகர்வோர் முறைப்பாடுகள் குறைவடையும்.
4. சர்வதேச சந்தைக்கு பொருட்களை விநியோகிக்க முடியும்.
5. போட்டியாளர்களுக்கு இலகுவாக முகம் கொடுக்க முடியும்.
6. நிறுவனத்தின் நன்மதிப்பு மற்றும் பிரதிமை அதிகரிக்கும்.
7. சந்தையில் நிலைத்திருக்க முடியும்.

(4×½ = 2 புள்ளிகள்)

(iv). அ) 1. சூழல் மாற்றங்கள்
2. சம்பள மட்டம்
3. வாழ்க்கைச் செலவு
4. பொருளாதாரக் கொள்கை
5. வட்டிவீத அளவு
6. அரச வரவு செலவுத்திட்டம்
7. வெளிநாட்டு தொடர்புகளும் ஒப்பந்தகளும்
8. நுகர்வோர் விருப்பு வெறுப்புக்கள்
9. சமூக கலாச்சார மாற்றங்கள்
10. அரச சட்டவிதிகள்

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. பல்வேறு சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்துகின்றமை
**உதாரணம்** :- பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச்சட்டம்
2. பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி நுகர்வோர் பாதுகாப்புக்களை உறுதி செய்தல்.
**உதாரணம்** :- பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, இலங்கை தர நிறுவனம்.
3. நுகர்வோர் தாமாகவே தம்மைப் பாதுகாக்க அமைப்பினை உருவாக்கியமை
**உதாரணம்** :- நுகர்வோர் சங்கம்
4. நுகர்வோருக்கு அறிவூட்டுவதற்கு விழிப்புணர்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
**உதாரணம்** :- நுகர்வோர் கருத்தரங்கு

(v). அ)

| **பண்டங்கள்** | **சேவைகள்** |
|---|---|
| 1. தேயிலை | 1. ஊழியர்கள் |
| 2. இறப்பர் | 2. வங்கிச் சேவை |
| 3. தெங்கு | 3. பழுதுபார்த்தல் சேவை |
| 4. தைத்த ஆடை | 4. விமானத்துறை முகச்சேவை |
| 5. வாசனைத்திரவியம் | 5. பாதுகாப்புச் சேவை |
| 6. மாணிக்கம் | 6. தரவு ஒழுங்கமைத்தல் சேவை |
| 7. பழவகை | |

(பண்டங்கள் (2×½ = 1 புள்ளி)
(சேவைகள் (2×½ = 1 புள்ளி)

The National e-learning Portal for The General Education

ஆ) 1. வணிகத்தின் நன்மதிப்பு அதிகரிக்கும்
2. நிதி மோசடி, ஏமாற்றங்கள் போன்ற முறையற்ற செயல்களை தவிர்க்கலாம்.
3. ஊழியர்களுக்கிடையில் பேதங்கள் இடம் பெறாத முறையில் சிறந்த மனித வள முகாமைத்துவம் இடம் பெற.
4. ஊழியர் திருப்தியினையும் நம்பிக்கையையும் அதிகரிக்கலாம்.
5. தரமான பொருட்கள் சேவைகளை விநியோகிப்பதனூடாக வாடிக்கையாளருக்கு நியாயமான வகையில் செயற்படல்.
6. ஊழியர் வரவின்மையினையும் ஊழியர் புரள்வினையும் குறைத்தல்.

(4×½ = 2 புள்ளிகள்)

02)

(i). அ) குறித்த நபர் அல்லது நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட வரி நேர்வரி ஆகும்
உதாரணம் :- வருமானவரி, கம்பனிகள் வரி

(விளக்கியிருப்பின் (½ புள்ளி)
(உதாரணம் ½ புள்ளி)

செலுத்தப்பட்ட வரியினை இன்னொருவர் மேல் சுமத்தக்கூடியதான வரி, நேரில் வரி ஆகும்
உதாரணம் :- பெறுமதி சேர்க்கப்பட்டவரி சுங்கவரி

(விளக்கியிருப்பின் (½ புள்ளி)
(உதாரணம் ½ புள்ளி)

ஆ) 1. வட்டி வீதம்
2. ஒதுக்கு வீதத்தை மாற்றுதல்
3. திறந்த சந்தை நடவடிக்கை
4. கழிவு வீதத்தை மாற்றுதல்
5. கடன் அளவை வரையறுத்தல்

(4×½ = 2 புள்ளிகள்)

(ii). அ) 1. வணிகத்தை ஆரம்பிக்க எதிர் பார்க்கும் குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலாளர் காரியாலயத்திலிருந்து தனியுடைமை வணிகப் பெயரை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளல்.

2. வணிகப் பெயரைப் பதிவு செய்வதற்குத் தேவையான கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்றுக் கொள்ளல்.

3. கிராம உத்தியோகத்தரால் சான்றுப்படுத்திய அறிக்கையையும், பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தினையும் பதிவு செய்வதற்குரிய கட்டணத்துடன் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல்.

4. பிரதேசச் செயலாளர் மேற்குறிப்பிட்ட விடயங்களைச் சரிபார்த்த பின் வணிகம் பதிவு செய்யப்பட்டதற்கான வியாபாரம் பெயர்ப் பதிவுச்சான்றிதழை வழங்குவார். இச்சான்றிதழை வணிக நிலையத்தில் அனைவரும் பார்வையிடக் கூடியவாறு காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. அடையாளமொன்று கிடைத்தல்
2. வணிகத்தின் பெயரின் உரிமையினை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
3. அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான தகைமை கிடைத்தல்.
4. கடனை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

(4×½ = 2 புள்ளிகள்)

(iii). அ) 1. பங்குடைமைச் சட்டப்படி, ஒப்பந்தப்படி இலகுவாக ஆரம்பிக்கலாம்.
2. பங்காளர் நேரடியாக விசேடதிறன்களைப் பயன்படுத்தலாம்.
3. கணக்கு வைப்பு, கணகாய்வு கட்டாயமில்லாமையால் நிர்வாகச் செலவு குறைவு.
4. பங்குடமை வணிகத்தின் பெயரில் வருமான வரி செலுத்தத் தேவையில்லை.
5. வசதி விருப்பப்படி ஒப்பந்தங்களை ஏற்படுத்தி தொழிற்பட முடிதல்.

ஆ) 1. பங்குடைமை வணிகத்தின் பெயரும் முகவரியும்
2. பங்காளர் மூலதன பங்களிப்பு விகிதம்
3. பங்காளருக்கிடையே இலாப நட்டம் பகிரும் முறை

4. பங்காளர் பற்றுக்கள்
5. பங்காளர் பற்று வட்டி வீதம்
6. பங்காளர் சம்பளம் வழங்கும் முறை
7. பங்காளர் சேர்தல், விலகல்
8. மேலதிக மூலதனத்திற்கான வட்டி
9. பங்காளர் உரிமை கடமை
10. பங்குடமை கலைப்பு முறை

(4×½ = 2 புள்ளிகள்)

(iv). 1. சட்டக் கட்டுப்பாடுகள் கடினமாயிருத்தல்
2. ஆரம்பிப்பதற்கு விரிவான முறையொன்றைப் பின்பற்ற வேண்டியிருத்தலும் அதற்காக செலவொன்றினை ஏற்க வேண்டியிருத்தலும்.
3. பங்குகளின் எண்ணிக்கைக் கேற்ப வாக்களிக்கும் அதிகாரம் கிடைப்பதனால் சிறுபான்மைப் பங்குதாரர் பாதிப்படைதல்
4. கம்பனிகள் தமது இலாபங்கள் மீதும் பங்குத்தாரருக்குக் கிடைக்கின்ற பங்குலாபங்கள் மீதும் வரி செலுத்த வேண்டியிருத்தல்.

(4×1 = 4 புள்ளிகள்)

(v). அ) 1. தமது திறமைகளை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதற்கான விருப்பம்
2. சமூகத்தில் காணப்படும் ஏதேனுமொரு பிரச்சினையைத் தீர்ப்பதில பங்கேற்பதற்கான விருப்பம்
3. தொழில்களினூடாக பெற்றுக் கொண்ட அனுபவம்
4. குறித்த ஒரு முறை தொடர்பாகப் பெற்றுள்ள கல்வியும் பயிற்சியும்
5. பொழுது போக்காகச் செய்கின்ற கருமம் வணிகமொன்றாக மாற்ற மடைதல்
6. முயற்சியாளர்கள் தோற்றம் பெறுவதற்கு பொருத்தமான சமூகப் பொருளாதாரப் பின்னணி காணப்படல்.
7. வணிகத்தின் உரிமையாளராக தானே இருக்க வேண்டும் என்ற விருப்பம்.

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படல்
2. வருமானத்துக்கான சந்தர்ப்பங்கள் தோன்றுதல்.
3. புதிய பொருட்கள், சேவைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறல்.
4. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர் வடைதல்.
5. நிறை தொழில் மட்டம் உருவாக்குதல்
6. பிரதேச வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படல்
7. புதிய சந்தைகள் அபிவிருத்தியடைதல்

(4×½ = 2 புள்ளிகள்)

03)

(i). அ) 1. சந்தை சிறியதாயிருத்தல்
2. குறைந்தளவு மூலதனம் முதலிடப்பட்டிருத்தல்.
3. குறைந்தளவு ஊழியர் காணப்படல்
4. குடும்ப அங்கத்தவர்களின் உழைப்பு அதிகமாக பயன்படுத்தப்படல்
5. தீர்மானமெடுத்தல் தன்னிடமுள்ள தரவுகளினடிப்படையில் மாத்திரம் இடம் பெறல்.
6. வணிகத்தின் முகாமை சுதந்திரமாக இருத்தல்
7. நவீன தொழில்நுட்பப் பயன்பாடு குறைவாக இருத்தல்

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. நிலையான அரசியல் பொருளாதாரப் பின்னணி காணப்படல்
2. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்
3. நிதி, மற்றும் வரிச்சலுகைகள் போன்ற ஊக்குவிப்புக்கள் பெற்றுக் கொடுத்தல்
4. விரிவான சந்தை காணப்படல்
5. நிறுவன ரீதியான வசதிகள் விற்பனை வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.

(4×½ = 2 புள்ளிகள்)

(ii). அ) 1. காசோலையில் முன்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரை அதே முறையில் காசோலையின் பின்புறத்தில் அவரது கையெழுத்தினால் எழுதுவது காசோலையில் புறக்குறிப்பிடல் எனப்படும்

(1 புள்ளி)

**சந்தர்ப்பங்கள்**
1. பெறுபவர் காசோலையை வங்கி கணக்கில் வைப்புச் செய்யும் பொழுது.
2. கட்டளைக் காசோலையை வேறொரு நபருக்கு வழங்கும் பொழுது
3. குறுக்குக் கோடிடப்படாத காசோலையொன்றை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்து காசாக்கும் போது.

(2×½ = 1 புள்ளி)

ஆ) 1. செயற்றிட்ட அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுத்தல்
2. நிதி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனைச் சேவைகளை வழங்கல்
3. பங்கு ஒப்புறுதிச் சேவை அளித்தல்
4. குத்தகைச் சேவைகளை வழங்கல்

(4×½ = 2 புள்ளிகள்)

(iii). அ) அனுகூலங்கள்
1. பாதுகாப்பானது
2. வினைத்திறனுடையது
3. இலகுவானது
4. 24 மணித்தியால சேவை
5. சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தல்

(3×½ = 1 ½ புள்ளி)

வரையறைகள்
1. தரவுகள் அழிவுறக் கூடிய தன்மை காணப்படல்
2. புதிய வடிவமைப்பில் இலத்திரனியல் மோசடிகளுக்கு உட்படக்கூடிய நிலைமையும் ஏற்படலாம்.
3. மேலதிகச் செலவொன்றைப் பொறுப்பேற்க வேண்டி ஏற்படும்.
4. அனைத்து விற்பனையகங்களிலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது. ‘

(3×½ = 1 ½ புள்ளி)

ஆ) 1. மாஸ்ட காட் (Master card)
2. வீசா காட் (Visa Card)
3. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் (American Express)

(2×½ = 1 புள்ளி)

(iv). அ) 1. வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல்
2. நீண்டகால குறுங்கால கடன்களை வழங்குதல்
3. குத்தகைச் சேவையை வழங்குதல்
4. அரச நிதித்தேவைகளுக்கு உதவுதல் (அரச முறிகளை வழங்குதல்)
5. வாடகைக் கொள்வனவுச் சேவை
6. ஆலோசனை சேவைகளை வழங்குதல்
7. அடகு சேவை
8. காணிகள் விற்பனை தொடர்பான சேவைகள்
9. காப்புறுதிச் சேவை
10. காரணிப்படுத்தல்

(4×½ = 2 புள்ளிகள')

ஆ) வணிகர்களால் தாங்கிக் கொள்ள வேண்டியேற்படக் கூடிய பாரியளவிலான நாட்டங்களுக்காகக் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ள முடிவதால் வணிகம் இயல்பு நிலைக்கு மாற்றப்பட்டு அதன் கருமங்களைத் தொடர்ச்சியாக நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கும்.

(2 புள்ளிகள்)

(v). அ) 1. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டங்களைப் பண ரீதியாக அளவிடக்கூடிதாக இருத்தல்.
2. நட்ட அச்சம் நிச்சயமாக நடைபெறுமெனக் கூறமுடியாதிருத்தல் வேண்டும்.
3. ஏற்பட்ட நட்டம் வேறு காப்புறுதி நட்டங்களுடன் தொடர்புற்றிருத்தல் வேண்டும்.
4. நிச்சயிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. இயற்கைத் தன்மை காரணிகளின் அடிப்படையில் தோன்றும் இடர்கள்
**உதாரணம் :-** மோட்டார் வாகனம் தேய்வு இயந்திரம் தேய்வுறுத்தல் இறப்பு, வயதாதல்
2. பணத்தால் அளவிட முடியாத நட்டங்கள்.
**உதாரணம் :-** பிழையான முகாமைத்தீர்மானங்களால் ஏற்படும் நட்டம்.
3. தனிநபர் இயலுமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் இடர்கள்
**உதாரணம் :-** பரீட்சையில் சித்தியடையாமை, ஊழியர் விலகிச் செல்லல்

(விபரிக்க (2 × ½ = 1 புள்ளி)
(உதாரணம் 2 × ½ = 1 புள்ளி)

04)
(i). அ)

| **ஆயுள் காப்புறுதி** | **ஆதனக் காப்புறுதி** |
|---|---|
| 1. காப்புறுதி ஒப்பந்தத் தொகையானது வயது, கட்டணம், உயிருக்கான இடரின் தன்மை கொடுப்பனவு செய்யக்கூடிய இயலுமை என்பவைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் | 1. குறித்த சொத்தின் நிதி ரீதியான பெறுமானத்தின் அடிப்படையிலே காப்புறுதி ஒப்பந்தத்தின் பெறுமானத் தொகை தீர்மானிக்கப்படும் |

| | |
|---|---|
| 2. இழப்பு ஏற்படினும் ஏற்படாவிடினும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் | 2. ஒப்பந்த காலத்தினுள் இழப்பு ஏற்பட்டால் மட்டுமே இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். |
| 3. இழப்பீட்டுத் தத்துவம் பொருத்தமற்றது | 3. இழப்பீட்டுத்தத்துவம் பிரயோகிக்கப் படும் |
| 4. காப்புறுதி செய்யப்பட்ட பெறுமானத் தொகைக்கு மேலதிகமாகக் கொடுப்பனவுகளுடன் உபகாரப் பணமும் சேர்த்து வழங்கப்படும் | 4. இங்கு ஏனைய அனுகூலங்களுக்கு உரித்து இல்லை |
| 5. ஒப்படைப்பு பெறுமானம் உண்டு | 5. ஒப்படைப்பு பெறுமானம் இல்லை |
| 6. வருடாந்த ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டியதில்லை. இது நீண்டகாலம் | 6. வருடாந்தம் ஒப்பந்தத்தைப்புதுப்பிக்க வேண்டும். இது குறுகிய காலம். |

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. புகையிரதப் பாதைகள் நாடு பூராவும் பரந்து காணப்படாமை
2. தேவையான எந்த நேரத்திலும் சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியாமை.
3. பயணம் முடியும் வரையில் இதனைப் பயன்படுத்த முடியாமையால் போக்கு வரத்து முறைகளைப் பயன்படுத்த வேண்டியேற்படல்.
4. மின்சார சமிக்ஞை தடைப்படல், புகையிரதப்பாதை பழுதடைதல் போன்றவைகள் காரணமாக தாமாக மேற்படல்

(4×½ = 2 புள்ளி)கள்)

The National e-learning Portal for The General Education

(ii). அ) 1. தகவல்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் முன்வைக்க முடிதல்
2. தகவல்களின் பிழையற்ற தன்மை உயர் மட்டத்தில் காணப்படல்.
3. தகவல்களை இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்

(2×1 = 2 புள்ளி)

ஆ) 1. நிறுவனத்தினுள் தமது கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ள கூடியதாக உள்ளது.
2. நிறுவன மாற்றங்களை தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் அறிவிக்க முடிகிறது.
3. ஆலோசனைகளையும் கட்டளைகளையும் வழங்க முடியும்
4. தொழிலாளரை ஊக்குவிக்கவும் அவர்களின் குழுத் தொழிற்பாட்டை ஊக்குவிக்கவும் முடியும்.
5. கருத்துக்களை உடனுக்குடன் பரிமாற்றிக் கொள்ள முடியும்.
6. முரண்பாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய முடியும்.

(4×½ = 2 புள்ளி)

(iii). அ) 1. ஏற்றுமதி இறக்குமதியின் போது அதிக சுங்கத் தீர்வை.
2. இறக்குமதிகளை மட்டுப்படுத்தல்
3. ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடை செய்தல்
4. வர்த்தக ஒப்பந்தங்கள்
5. இறுக்கமான நாணயக் கொள்கைகள்

(4×½ = 2 புள்ளி)

ஆ) 1. பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்.
2. தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்.
3. உற்பத்தியாளரின் கருமங்கள் இலகுவாதல்
4. சந்தை தகவல்களை உரிய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்.
5. சந்தையை விரிவுபடுத்த முடிதல்

(4×½ = 2 புள்ளிகள்)

**(iv). முகவர்** **தொழிற்பாடு**

| | | |
|---|---|---|
| 1. தரகர் | - | விற்பவரையும், வாங்குபவரையும் சந்திக்கவைத்து விற்பனை இடம் பெறச்செய்து இருதரப்பினரிடமும் தரகுப் பணத்தினைப் பெறுபவர். |
| 2. தரகு முகவர் | - | முதல்வருக்காக பொருட்களை கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்து தரகினைப் பெற்றுக் கொள்பவர். |
| 3. காரணிகர் | - | முதல்வரின் சார்பாக தனது பெயரில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விற்பனை செய்ய அதிகார முடையவர். |
| 4. பொறுப்பு முகவர் | - | முதல்வர் சார்பாக கடன் விற்பனைகளுக்கான வருமதிகளை வசூலித்தல் இதற்காக பொறுப்புத்தரகு கூலி பெறுபவர். |
| 5. ஏலவிற்பனையாளர் | - | முதல்வரின் பொருட்களை திறந்த, வாய்மொழி மூலம் உயர் விலையினை முன்வைக்கும் கொள்வனவாளருக்கு விற்பனை செய்து ஏலவிற்பனைக் கட்டணத்தைப் பெறுபவர். |

(குறிப்பிட 4×½ = 2 புள்ளிகள்)
(விளக்க 4×½ = 2 புள்ளிகள்)

(v). அ) 1. சுயசேவைமுறை மற்றும் தமக்குத் தேவையான பொருட்களை தாமே தெரிவு செய்யும் சுதந்திரம்
2. வாகனத்தரிப்பிட வசதி காணப்படும்
3. ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
**உதாரணம்** :- வங்கிச்சேவை பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள், சிறுவர்களுக்கான விளையாட்டு வசதிகள்.
4. சிறந்த சூழல் (குளிரூட்டப்பட்ட இடம் சுத்தம்)
5. அதிர்ஷ்டசீட்டு, போனஸ் புள்ளிகள் போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
6. இலத்திரனியல் பண பயன்பாடு மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. பொருட்களைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
2. கட்டளைகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
3. உற்பத்திப் பொருட்களது விலை பொதுவாகக் குறைவடைதல்
4. 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடிதல்.
5. தேவையான தகவல்களை உடனடியாகப் பெற முடிதல்.
5. குறைந்தளவான ஆவணப்பயன்பாடு.

(4×½ = 2 புள்ளிகள்)

## பகுதி - II

*05)*

(i). *அ) 1.* நிறுவனமொன்றின் வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்தினை வினைத்திறனாகவும் விளைதிறன் கொண்டதாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அந்நிறுவனத்தில் காணப்படும் மானிட பௌதீக வளங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் கட்டுப்படுத்தல் போன்ற கருமங்களை உள்ளடக்கிய ஒரு செயன்முறை முகாமைத்துவம் ஆகும். *(2 புள்ளிகள்)*




*(முழுமையான விடைக்கு 2 புள்ளிகள்)*

(ii). *அ)* மானிடத்திறன் *(1 புள்ளி)*

**காரணங்கள்**

1. ஏனையவர்களை விளங்கிக் கொள்வதற்கு.
2. பிறருடன் இணைந்து வேலை செய்வதற்கு
3. மாற்றவர்களை மனிதாபிமான ரீதியில் மதிக்க
4. மற்றவர்களைக் கொண்டு வேலை செய்விப்பதற்கு.

*(2×½ = 1 புள்ளி)*

*ஆ)* 1. பிரச்சினைகளை இனங்காணல்
2. மாற்றுத் தீர்வுகளை கட்டியெழுப்புதல்
3. மாற்று வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்
4. சிறந்த மாற்று வழியினைத் தெரிவு செய்தல்.
5. செயற்படுத்தல் / நடைமுறைப்படுத்தல்

*(4×½ = 2 புள்ளிகள்)*

(iii). *அ)* 1. காலத்திற்கேற்ப சரியான தகவல்களைப் பயன்படுத்தாதிருத்தல்.
2. கடந்த காலபோக்கினையும் தற்போதுள்ள தரவுகளின் அடிப்படையிலும் திட்டங்களைத் தயாரித்தல்.
3. அக்கறையும் அர்ப்பணிப்பும் போதுமானளவு இல்லாதிருத்தல்
4. இயலுமை, கொள்ளளவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைத் தயாரித்தல்.
5. அனைவரது அக்கறையும், அர்ப்பணிப்பும் போதுமானளவு இல்லாதிருத்தல்.
6. அனைத்து முகாமைத்துவத் துறைக்கும் திட்டம் பங்களிக்கப்படாதிருத்தல்.

*(4×½ = 2 புள்ளிகள்)*

*ஆ)* 1. ஊழியர்கள் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படுவர்
2. நிறுவனத்தின் மொத்த உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.
3. சிறந்த தொழிலாளர் தொழில்கொள்கோவர் உறவு காணப்படும்.
4. தீர்மானங்களை இலகுவாக நடைமுறைப்படுத்தலாம்.
5. நிறுவனத்தின் பிரதி விம்பம் உயர்வடையும்.
6. ஊழியர் புரள்வு வரவின்மை குறைவடையும் *(4×½ = 2 புள்ளிகள்)*

The National Learning Portal for the General Education

(iv). அ) 1. பொருட்கள், இயந்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற செயற்றிறன் அதிகரித்தல்.
2. இடவசதிகளின் மூலம் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
3. பொருள் பயன்படுத்தலின் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
4. பொருட்களும் ஊழியர்களும் அசையும் போது ஏற்படக்கூடிய தடைகள் குறைவடைதல்.
5. விபத்துக்கள் குறைவடைதல்
6. தொடர்பாடல், ஒருங்கிணைத்தல், கண்காணிப்பு என்பன இலகுவாக இருத்தல்
7. ஊழியர்களின் மனோபலம் அதிகரிக்கும்.

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. பாரியளவு அனுகூலம் காரணமாக அலகு கிரயம் குறையும்.
2. முழுமையான சந்தை தொடர்பாக கவனம் செலுத்த முடியும்.
3. பெரும்பாலும் தனிநபர் ஒருவரால் உற்பத்தியை கட்டுப்படுத்த முடியுமாயிருத்தல்.
4. நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.

(4×½ = 2 புள்ளிகள்)

(v). அ) 1. இயந்திரன் கட்டுப்பாடு
2. இருப்புக் கட்டுப்பாடு
3. தரக்கட்டுப்பாடு
4. கிரயக் கட்டுப்பாடு

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. உரிய தரங்களைக் கொண்ட பொருட்களை வழங்கலாம்.
2. அழிவடைதல், பழுதடைதல் என்பதைக் குறைத்து வீண் விரயங்களைக் குறைத்தல்
3. போட்டி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து சந்தையில் நிலைத்திருத்தல்
4. நுகர்வோரை திருப்திப்படுத்துதல்
5. சட்ட நிலைமைகளுக்கேற்ப செயற்பட
6. கேள்வி அதிகரிக்கும்
7. விற்பனை அதிகரித்து இலாபத்தன்மை அதிகரிக்கும். (4×½ = 2 புள்ளிகள்)

06)

(i). அ) அனுகூலங்கள்

1. செயற்றிறனும், வினைத்திறனும் அதிகரிக்கும்.
2. உற்பத்திப் பொருட்களின் தரம் உயர்வடையும்
3. உற்பத்திக் கிரயம் குறைந்து பொருட்களின் விலை குறையும்.
4. உற்பத்தியின் இயலளவு அதிகரிக்கும்
5. வள விரயங்கள் குறைவடையும்
6. சாதகமான வேலைச்சூழலொன்று உருவாகும். (2×½ = 1 புள்ளி)
7.

**பிரதி கூலங்கள்**

1. பாரியளவான முதலீடு தேவைப்படல்
2. பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லாதிருத்தலும் பயிற்சி வழங்குவதற்காக கூடிய செலவுகளை ஏற்க வேண்டியிருத்தலும்
3. விரைவாக தொழில்நுட்பம் மாற்றமடைதல்
4. ஊழியர்களுக்கிடையிலான தொடர்புகள் பலவீனமடைதல்
5. திடீர் தொழில்நுட் வீழ்ச்சியும், தவறுகள் ஏற்படுதலும்.
6. சூழல் பிரச்சினைகள் உருவாகுதல். (2×½ = 1 புள்ளி)

ஆ) 1. சந்தையில் நிலைத்திருப்பதற்கு / வாழ் தன்மைக்கு
2. நிகழ்கால இலாபத்தினை உச்சப்படுத்துவதற்கு
3. சந்தைப்பங்கை உச்சப்படுத்துவதற்கு
4. சந்தைப் பங்கினை உறிஞ்சுக் கொள்வதனை உச்சப்படுத்துவதற்கு
5. தரத் தன்மைத்துவம்

(4×½ = 2 புள்ளிகள்)

(ii). அ) 1. சுருக்கமானதும் எளிமையானதாகவும் இருத்தல்
2. உச்சரிப்பதற்கும், இனங்காண்பதற்கும் நினைவில் வைத்திருப்பதற்கு இலகுவாயிருத்தல்.
3. உற்பத்தியின் உள்ளார்ந்த பண்புகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.
4. இலகுவாக ஏனைய மொழிகளிலும் இனங்காணக்கூடியதாக இருத்தல்.
5. போட்டியாளர்களின் சின்னங்களை விட மிகப்பெரிய வேறுபாட்டினைக் கொண்டிருத்தல்.
6. கலாசாரத்தை வெளிப்படுத்தல்.

(2×1 = 2 புள்ளிகள்)

ஆ) 1. இலகுவாக பொருட்களைத் தெரிவு செய்ய முடிதல்
2. போலிப் பொருட்களில் இருந்து பாதுகாப்பு பெறமுடிதல்
3. தமக்குத் தேவையான பண்டத்தினைத் தெளிவாகக் கேட்டுப் பெறமுடிதல்
4. பிரசித்தமான சிறந்த தரத்துடனான பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலகுவாக அமைதல்
5. முறைப்பாடுகளை முன்வைக்க இலகுவாக அமைதல்

(4×½ = 2 புள்ளிகள்)

(iii). அ) விற்பனை மேம்படுத்தல் :-
பொருள் அல்லது சேவையினைக் கொள்வனவு செய்வதற்கு தூண்டப்படுகின்ற குறுங்கால ஊக்குவிப்பு இதுவாகும்.

தனிப்பட்ட விற்பனை

உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கும் விற்பனைகளை அதிகரித்துக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுடன் தனிப்பட்ட ரீதியில் நேருக்கு நேர் எண்ணங்களைப் பரிமாற்றிக் கொண்டு சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்புவதினூடாக பண்டங்களை விற்பனை செய்தல் தனிப்பட்ட விற்பனை.

(2×1 = 2 புள்ளிகள்)

ஆ) சந்தைத்துண்டமாக்கல்
முரண்பாடான பண்புகளைக் கொண்ட அனைத்துச் சந்தைகளையும் சமூக பண்புகளின் கூடிய குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துதல் சந்தை துண்டமாக்கல் எனப்படும்.

இலக்குச் சந்தை
அனைத்து சந்தையிலும் பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர் இடையே ஒரேமாதிரியான (சமமான) பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை இனங்கண்டு அவர்களிலும் நிறுவனத்திற்கு மிக கவர்ச்சியாகவும் இலாபத்தன்மையுடனும் சேவை செய்யக்கூடிய சந்தையின் பகுதி இலக்கு சந்தை எனப்படும்.

(2×1 = 2 புள்ளிகள்)

(iv). அ) 1. தேவையான நிதியின் அளவு (நீண்டகாலமா, குறுங்காலமா)
2. நிதி தேவைப்படுகின்ற காலம் (நீண்டகாலமா, குறுங்காலமா)
3. நிதி பெறுவதற்கான கிரயம்
4. வணிக அமைப்பின் தன்மை (தனியுடமை /பங்குடைமை / கம்பனி)
5. பிணைத் தேவைப்பாடு
6. வணிகத்தின் மூலதன அமைப்பில் ஏற்படக்கூடிய தாக்கம்
7. வணிக முகாமைத்துவத்திற்கு ஏற்படும் தாக்கம். (4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. எதிர்காலத்தில் காசு மிகை ஒன்று ஏற்படுமாயின் அதனை முன் கூட்டியே அறிந்து கொள்ள முடிவதால் அப்பணத்தினை வினைத்திறனாக முதலீடு செய்ய முடியும்.
2. எதிர் காலத்தில் காசுக்குறைவொன்று ஏற்படுமாயின் அதனையும் முன்கூட்டியே அறிந்து அதற்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக முடியும்.
3. உண்மையான பணத்தினது செயற்பாட்டினை ஒப்பிடுவதன் மூலம் காசு தொடர்பான திட்டமிடலும் கட்டுப்பாடும் இலகுவாகும்.

(4×½ = 2 புள்ளிகள்)

(v). சார்பாக
1. தனியார் துறை நியாயமற்ற முறையில் இலாபம் உழைப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு
2. ஏகபோக நிறுவனங்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கு
3. பொது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு
4. தனியார் முதலீடு அற்ற நிறுவனங்களுக்கு இது பொருத்தமானது.

அல்லது

எதிராக
1. போட்டியின்மையால் தனியுரிமை நிலை உருவாகும்.
2. நட்டங்கள் பாதீட்டின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது.
3. வாடிக்கையாளருக்கு சிறப்பான சேவையை வழங்க முடியாமை.˙.
4. அரசியல் தலையீடு

(4×1 = 4 புள்ளிகள்)

07)

(i). அ) 1. குறுங்கால நிதித்தேவைப்பாடு அன்றாட வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நிதியினைக் குறிக்கின்றது.

2. நீண்டகால நிதித்தேவைப்பாடு :-
வணிகமொன்றை ஆரம்பிக்கும் போதும் வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் போதும் ஆரம்பத்தில் தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியைக் குறிக்கும்.

(குறிப்பிட2×½ = 1 புள்ளி)
(விபரிக்கல் 2×½ = 1 புள்ளி)

ஆ) 1. பங்கு இலாபம்
2. மூலதன இலாபம்
3. ஒதுக்கங்களை மூலதனமாக்கல்
4. உரித்து வழங்கல்
5. பங்குப்பிளவு
6. இயக்குனராவரும் வாய்ப்பு
7. வாக்களிக்கும் அதிகாரம்
8. பங்குப்பத்திரத்தை உத்தரவாத பிணையாக பயன்படுத்த முடியும்
9. மூலதன இலாபங்களுக்கு வரி விடுதலை (4×½ = 2 புள்ளிகள்)

The National e-learning Portal for the General Education

(ii). அ) கம்பனியின் ஒதுக்கங்கள் பங்கு மூலதனமாக மாற்றப்படுகின்றது. இதன் போது தற்போதுள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்திற்கேற்ப புதிய பங்குகள் வழங்கப்படும் ஒதுக்கங்கள் (மூலதன மாக்கப்படும் பொழுது கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு ஏற்படும். (1 புள்ளி)

கம்பனியொன்று மேலதிக மூலதனத்தேவைக்குப் புதிய பங்குகளை வழங்கும் போது கம்பனியில் தற்போதுள்ள சாதாரண பங்குத்தாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்திற்கேற்ப பங்குகளை வழங்குதல் இடம் பெறும். உரித்து வழங்கல் மூலம் கிடைக்கின்ற பங்குகளுக்கு பங்குதாரர் கம்பனிக்கு பணம் செலுத்துதல் வேண்டும். (1 புள்ளி)

ஆ) 1. தனி நபர்களையும் நிறுவனங்களையும் முதலீடு செய்வதற்காகத் தூண்டுதல்.
2. முதலீட்டாளர்கள் தமது மூலதனத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
3. அரசின் பிணைப்பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் அரசுக்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
4. வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டினுள் கவர்ந்திழுக்கக் கூடியதாக இருத்தல்.
5. கம்பனியின் பங்குகளுக்கு பெறுமதியொன்று உருவாகுதல்.
6. கம்பனிகளின் நன்மதிப்பும் கீர்த்தியும் உயர்வடைதல்
7. கம்பனிகளின் பங்குகளுக்கு இரண்டாம் தர சந்தையொன்று உருவாதல்.

($4\times\frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

(iii). அ) 1. வாய்மொழி, எழுத்துமூலம் எச்சரிக்கை செய்தல்
2. தண்டனை வழங்குதல் (சம்பளத்தை இடைநிறுத்துதல், சம்பளத்தைக் குறைத்தல்)
3. தகுதி காண் காலத்தை நீடித்தல்
4. வேலையை முடிவுறுத்துதல்

($4\times\frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

ஆ) 1. வேலையின் போதனா பயிற்சி
2. பயிலுனர்களை பயிற்றுவித்தல்
3. தொழில் சுழற்சி முறை
4. நடி பாங்கு ஆற்றும் முறை
5. பயிற்சியும் அபிவிருத்தியும் வேலைத்திட்டம்
6. தயார்ப்படுத்தல்

($4\times\frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

(iv). அ) 1. எதிர்காலத்தில் ஊழியர் தேவையினை தீர்மானிக்கலாம்.
2. மனித வளத்தினை மிகவும் வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் பயன்படுத்தலாம்.
3. ஊழியர்களது கிரயத்தினைக் குறைக்கலாம்.
4. ஊழியர்களின் விருத்தி
5. உபாய முறையிலான திட்டமிடலை உருவாக்கலும் செயற்படுத்தலும்.

($4\times\frac{1}{2}$ = 2 புள்ளிகள்)

**ஆ) அனுகூலம்**

1. ஊழியர்கள் தூண்டப்படல்
2. சிறந்த ஊழியர் தொடர்பு ஏற்படுதல்
3. பொருத்தமான ஊழியர்களை வைத்துக்கொள்ள முடிதல்
4. ஆட்சேர்த்தலுக்கும் ஆட்சேர்ப்பதற்குமான செலவுகள் குறைவடைதல்
5. ஊழியர்களுக்கு நிறுவனத்திடம் காணப்படும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அதிகரிக்கும்.

($2\times\frac{1}{2}$ = 1 புள்ளி)

**பிரதி கூலங்கள்**

1. நவீன அறிவு நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படாதிருக்கும்.
2. பயிற்சிக்காகக் கூடிய செலவுகளை ஏற்க வேண்டி ஏற்படும்.
3. ஊழியர்களுக்கிடையே தேவையற்ற வகைல் போட்டி உருவாதல்
4. மிகப்பொருத்தமான ஊழியரைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு குறைவு.

(2×½ = 1 புள்ளி)

(v). 1. விண்ணப்பங்களை மதிப்பிடல் :-
தொழில் எதிர்பார்ப்பவர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுய விபரத்தினை மதிப்பீடு செய்து கொள்வதன் மூலம் பொருத்தமான விண்ணப்பதாரியை தெரிவு செய்தல்.

2. பரீட்சை நடாத்தல் :-
உளச்சார்புப் பரீட்சை, தேர்ச்சிப் பரீட்சை, அறிவுப்பரீட்சை, புத்திக்கூர்மை பரீட்சை செய்முறைப் பரீட்சை போன்றவற்றின் ஊடாக பொருத்தமான நபரை தெரிவு செய்தல்.

3. நேர்முகப் பரீட்சை மூலம் :-
விண்ணப்பத்தாரியின் ஆற்றலை நேர்முகமாக கேட்டு அறிவதன் மூலம் தெரிவு செய்தல்.

4. பின்னணிப்பரீட்சை / பின்புல ஆய்வு
குடும்பப்பின்னணி பாடசாலை பின்னணி மற்றும் பொலிஸ் அறிக்கை என்பவற்றின் தகவல்களில் தெரிவு செய்தல்.

5. மருத்துவ பரிசோதனை :-
உரிய தொழிலை மேற்கொள்ள சிறந்த தேக ஆரோக்கிய நிலை காணப்படுகின்றதா? என்பதை மருத்துவ பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தி தெரிவு செய்தல்.

(குறிப்பிட 4×½ = 2 புள்ளி)

(விபரிக்க 4×½ = 2 புள்ளி)

08)

(i). அ) 1. செயற்பாட்டு மட்டம்
2. அறிவு மட்டம்
3. முகாமை மட்டம்
4. தந்திரோபாய மட்டம்

ஆ) 1. கொடுக்கல் வாங்கல் செயன்முறைமை
2. அறிவு பணி முறைமை
3. அலுவலக கன்னியக்க முறைமை
4. முகாமைத் தகவல் முறைமை
5. தீர்மான உதவி முறைமை
6. நிறைவேற்று உதவி முறைமை

(4×½ = 2 புள்ளிகள்)

(ii). 1. மூலத்தின் அடிப்படையில் :-
தகவல் தோன்றிய மூலம் உட்புறமா அல்லது வெளிப்புறமா என்பதன் அடிப்படையில்

2. தன்மையின் அடிப்படையில் :-
தகவல்கள் பண்பு ரீதியானவையா? அளவு ரீதியானவையா?

The National e-learning Portal for The General Education

3. முகாமைத்துவ அடிப்படையில் :-
உபாய முறைகள் உபாய வழிமுறைகள் நெறிப்படுத்தல்

4. காலத்தின் அடிப்படையில் :-
எதிர்கால, நிகழ்கால, இறந்த காலம்

5. நிகழ்வின் அடிப்படை :-
நிச்சயமான நிகழத்தக்க.

6. உற்பத்தித் தொழிற்பாட்டின் அடிப்படையில் :-
நிதி, உற்பத்தி, சந்தைப்படுத்தல், மனித வளம், ஆராய்ச்சி அபிவிருத்தி

7. திரட்சியாக்கப்பட்டதும், பிரித்தெடுக்கப்பட்டதும் :-
திரட்சியாக்கப்பட்ட தகவல்கள், பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள்.

(குறிப்பிட 4×½ = 2 புள்ளி)
(விபரிக்க 4×½ = 2 புள்ளி)

(iii). அ) 1. சந்தைப்படுத்தல் தகவல் முறைமை
உப முறைகள் :- சந்தை ஆராய்ச்சி சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி, விளம்பரம், விற்பனை எதிர்வு கூறல்.
2. நிதி மற்றும் கணக்கீட்டுத் தகவல் முறைமை
உப முறைகள் :- நிதி திட்டமிடல், நிதி எதிர்வு கூறல், பொது நாட் குறிப்பு, கணக்கீட்டு முறைமை.
3. செயற்பாட்டு தகவல் முறைமை
உப முறைகள் :- கொள்ளளவு திட்டமிடலும் கட்டுப்படுத்தல், கணனியுடனான உற்பத்தி செயன்முறை, பொறி முறைக்கட்டுப்பாடு.
4. மனிதவள தகவல் முறைமை :-
உப முறைகள் :- செயற்திறன் மதிப்பீடு ஊழியர் சம்பளமுறை, பயிற்சி அபிவிருத்தி, ஊழியர் வருகை.
5. ஆராய்ச்சி அபிவிருத்தித் தகவல் முறைமை.
உப முறைகள் :- உற்பத்தி ஆய்வு, உற்பத்தி அபிவிருத்தி.

(வகைப்படுத்த 2×½ = 1 புள்ளி)
(உபமுறைகள் 2×½ = 1 புள்ளி)

ஆ) ஓர் அறையில் அல்லது ஒரு கட்டடத்தில் அல்லது ஒரு வேலைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிகளையும், வேலைத்தளங்களையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி உருவாக்கப்படுகின்ற வலையமைப்பாகும். (1 புள்ளி)

பல நாடுகள் அல்லது பல நகரங்கள் என்பவற்றில் அமைக்கப்பட்டுள்ள கணினிகளையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி கட்டியெழுப்படுகின்ற கணினி வலையமைப்பாகும்.

(1 புள்ளி)

(iv). அ) 1. நிறைவேற்றுச் சுருக்கம்
2. வணிக விபரணம்
3. சந்தைப்படுத்தல் திட்டம்
4. செயற்பாட்டுத்திட்டம்
5. மனித வளத்திட்டம்
6. நிதித்திட்டம் (2×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. நிறுவனக்கட்டமைப்பும் நிறுவன அமைப்பு வரைபடமும்.
2. நிறுவனக் கட்டமைப்பு முறையொன்றிலுள்ள பதவிகளும் பொறுப்புக்களும்.
3. மனித வளங்களுக்கான வருடாந்த செலவுகள்.

(v). அ) 1. புதிய வணிகம் ஒன்றை ஆரம்பிக்கும் போது
2. தற்போது செயற்பட்டு வரும் வணிகத்தை விரிவுபடுத்த
3. வணிகங்களை ஒன்றிணைப்பதற்கு
4. வணிகம் ஒன்றை நவீனமயப்படுத்த
5. வணிக நிறுவனங்களை கொள்வனவு செய்ய

(4×½ = 2 புள்ளிகள்)

ஆ) 1. மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
2. கடனுக்கான தவணைக் கட்டணத்தை செலுத்த
3. மின்சாரம்
4. சம்பளமும் கூலியும்
5. வாடகை
6. தொலைபேசிக் கட்டணம்
7. நிர்வாகச் செலவுகள்

(4×½ = 2 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education